பெரிய ஆற்றின் குறுக்கே அணை

* 564 வினு.—திரு. வீ. செல்லதுரை: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், தேக்கம்பட்டி ஊராட்சிப் பகுதி, குடுவம் பட்டியில் ஓடிக்கொண்டிருக்கும் "பெரிய ஆற்றில்" அணை கட்டும் திட்டம் எதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

வந்தவாசியில் தெரு விளக்குகள்

* 565 வினு.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி பேரூராட்சி எல்லையில் உள்ள குழல் விளக்குகள் ஓராண்டு காலமாக எரியாத காரணத்தால் குழல் விளக்குகளுக்குப் பதில் சாதாரண மின் விளக்குகளைப் போடும் படி பேரூராட்சி கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) மின்வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து 350 குழல் விளக்குகளில் 225 குழல் விளக்குகள் எரிகின்றன. மீதி இருக்கும் குழல் விளக்குகளும் எரிவதற்காக, மின்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது பெரும்பாலான குழல் விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதனுல், இப்பொழுது சாதாரண விளக்கு களாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என வந்தவாசி பேரூராட்சி கூறியுள்ளது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, 200-க்கும் அதிகமாக எரிவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறுர்கள். நான் அந்த வந்தவாசி பேரூராட்சித் தலைவனுக இருக்கிறேன். உண்மை யிலேயே அங்கே எரியும் விளக்குகள் 100-க்கும் குறைவுதான், அது